Judicial Form No.53
( See Rule 42 )
**DEPOSITION OF WITNESSES**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATHUR**
**Case No. CC. No. 24/2022**
**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 2 Page.No.**

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. மீனா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜா பாதர் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கிருஷ்ணசாமி | தொழில் | முன்னாள் ராணுவ வீரர் |
| கிராமம் | நாட்றம்பள்ளி | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 78 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 15th day of April 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை : எதிரி ஆஜர்**

நான் நாட்றம்பள்ளியில் வசிக்கிறேன். நான் ராணுவ வீரராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். பார்த்துள்ளேன். அ.சா 1 இளங்கோ எனது மனைவியின் தம்பி. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்பு, தேதி மாதம் நினைவில்லை. இரவு நேரம் சுமார் 8.00 மணி இருக்கும். அ.சா.1 இளங்கோ, பேக்கரி கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்தார். நானும் அங்கிருந்தேன். அப்போது, ஆஜர் எதிரி பேக்கரி கடைக்கு வந்து மக்கன்பேடா கேட்டார். அ.சா1 ஒரு துண்டு மக்கன்பேடா ரூ. 20/- என்று சொன்னார். ஆஜர் எதிரி ரூ. 10/- க்கு தரும்படி கேட்டார். ஒரு கிலோவாக வாங்கினால் ரூ. 350/- தரலாம் என்று அ.சா 1 சொன்னார். அதற்கு ஆஜர் எதிரி கெட்ட வார்த்தையால் எங்களை பேசினார். என்னை தான் முதலில் திட்டினார். என்னை பார்த்து தேவிடியா பையா என்று

திட்டினார். உன்னால் என்ன மயிரு புடுங்கமுடியும் என்று திட்டினார். உன் வயது என்ன , எங்கள் வயது என்ன, இப்படி பேசலாமா என்று கேட்டேன். அதன் பின்னர், அ.சா 1 ஐ பார்த்து நீ யாருடா தேவிடியா பையா பேசுவதற்கு என்று கூறிக்கொண்டே ஒரு கருங்கல்லால் அ.சா1 ன் தலை மீது அடித்து விட்டார். அ.சா 1 தலையில் இருந்து நிறை இரத்தம் வந்தது. அதனால் நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். ஆனால் அவர்கள் முதல் உதவி மட்டும் தான் அளிக்க முடியும் என்று கூறி திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு செல்லும்படி கூறினார்கள். பின்னார் அ.சா 1 ஐ திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

சாட்சியின் கையொப்பம்